# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,245 — 1936 ம் ஸ்ரீ புரட்டாதிமீ 25 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிதின் ஏற்பாடுகளின் கீழ் 1934 ம் ஆண்டு (ஜூன்) ஆனிமீ 22 ந் திகதியின் " கெசெற் " பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றிருந்த மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் காரியஸ்தத்தின்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரசபையார் ஆமர்வீதி வண்ணுன்துறையில் சீலை காயப்போடும் நிலமாகிய ஓர் பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணியை எடுத்திக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் :

பிரதமபடத்து இல : A 584. புதுக்கடைப்பகுதி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பறடைஸ் பெறிரேட்டில் வரிப்பண இலக்கம் 51 உள்ளகாணியின் பகுதி | ஜலதாரையின் பகுதியுள்ள புல் லுத்தோட்டம் | சேர். எஸ். டி. வண்டாரநாயக, வியாங் கொடை | 0 2 13·01 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன். மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஆண்டு (ஒக்றேபர்) ஐப்பசி மாசம் 17 ந் திகதி, சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும் பதிவுகொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கொழும்பு நகரசங்கக் கந்தோர்,
1936 ம் ஸ்ரீ (செப்றெம்பர்) புரட்டாதிமீ 22 ந் ௳.

டபிள்யூ. எல். மேர்பி,
நகரசங்க சபாநாயகரும், நகராதிகாரியும்

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிரிந்திவெல நீர்பாச்சல் (எல) வுக்கு இரும்பு துளாய் சரிபண்ணுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொப்படும், காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 349. குறிச்சி—கும்பள்ஒழுவ பட்டணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லியன்வத்தை .. | தோட்டம் .. | கும்பள்ஒழுவ பட்டணக் குடி ரூப்பகெதற ஹீன் புஞ்சா .. | 0 0 13·42 |

எடுத்துக்கொள்ளவதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸ்ரீ (ஒக்டோபர்) ஐப்பசி மாசம் 19 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு நுவரேலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரேலியாக் கச்சேரி,
1936 ம் ஸ்ரீ (செப்றம்பர்) புரட்டாதிமீ 19 ந் ௳.

ஆர். எம். டேவிஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, நுவரேலியா.


323——J. N. 59451—141 (9/36)

T 1

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

நி. 1,416 (அனுராசபுரம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1936 ம் ஸூ (செப்றம்பர்) புரட்டாதிமீ 25 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக் காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1936 ம் ஸூ (செப்றம்பர்) புரட்டாதி 10 ந் தேதியிலன்று கொழும்பிலுள்ள காணியுரிமை நிர்ணயப் பகுதிக் கந்தோரிற் சொடுக்கப்பட்டது.

சீ. எவ். இங்கிள்டெள,
காணியுரிமை நிர்ணய உதவி உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ரெஜிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக் உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

**(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித் துண்டுகளி லுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட்குட்பட விருக்குங் காணித்துண் டெதுவாயினும் மேற்படி அறிவித்தலின்கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாததுமன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமை சொல்லவும் வேண்டியதில்லை.**

அட்டவணை.

வடமத்திய மாகாணம், அனுராசபுர டிஸ்திறிக், ஹுறுலுபலாத்தை உலகல்ல கோறளை, வெவ்துலானையைச்சார்ந்த கோண்வெவ கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் காணித்துண்டுகள் : இக்காணித்துண்டுகளெல்லாங் கீழ்க்காணு மெல்லைகட்குளிருக்கின்றன :—

வடக்கு : கிறிந்தேகம கிராமத்தின் எல்லை (கல் குளத்திலிருந்து யக்கல்லைப்குபோகும் றோட்டின் பகுதி) ;

கிழக்கு : பெறெண்டியகம, உத்திமடுவ கிராமங்களின் எல்லைகள் :

தெற்கு : வண்ணன்.குளம் கிராமத்தின் எல்லை ;

மேற்கு : ஒறுக்மாங்குளம், மீருவிய கிராமங்களின் எல்லைகள்.

இலங்கை யளவை கிராமபடம் நி. 1,273.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | குறுக்கு றோட்டு (அரைவாசி விசாலம்) .. | 0 | 1 | 26 |
| 2 | கதுறுகஹஹேன, கீறியகஹஹேன, வெலங்கஹயாய, கோங்கஹலந்த, கோண்வெவேஹேன, கோங்கஹஹேன .. .. | 142 | 3 | 15 |
| 3 | கோண்வெவ (குளமும் கட்டும்) .. | 33 | 3 | 1 |
| 4 | அடிப்பாதை .. | 0 | 0 | 15 |
| 8 | ஷை .. | 0 | 0 | 4 |
| 9 | கரத்தை பாதை .. | 1 | 1 | 15 |
| 10 | கோண்வெவேஹேன .. | 17 | 2 | 17 |
| 11 | ஷை , கோங்கஹலந்த | 30 | 2 | 27 |
| 12 | கோண்வெவேஹேன .. | 1 | 0 | 0 |
| 13 | ஷை .. | 1 | 0 | 0 |
| 14 | ஷை (குளக்கட்டோடு சேர்ந்த சேமிப்பு) | 1 | 3 | 18 |
| 15 | கோண்வெவேஹேன .. | 1 | 0 | 0 |
| 16 | ஷை .. | 1 | 0 | 0 |
| 17 | ஷை .. | 1 | 0 | 0 |
| 18 | ஷை .. | 1 | 0 | 0 |
| 19 | ஷை .. | 5 | 0 | 29 |
| 20 | ஷை .. | 0 | 3 | 20 |
| | மொத்தம் .. | 240 | 2 | 27 |

அனுராதபுர நி. உ.6—1936.

## நகரசங்க அங்கத்தவர் தெரிவுசெய்தலைப்பற்றிய அறிவித்தல்கள்.

நீர்கொழும்பு நகரசங்கம்.

8 ம் பிரிவு—அங்கத்தவர் தெரிவுசெய்தல்.

1920 ம் ஆண்டு 4 ம் இலக்க தத்தமிட ஆளுகைச் சட்டத்தின் 31 ம் பிரிவின் உட்பிரிவு இரண்டின் முறைப்படி நீர்கொழும்பு நகரசங்க 8 ம் பகுதிக்கு 1934 ம், 1935 ம், 1936 ம், ஆண்டுகளுக்கு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட ஏ. என். டி. ஏ. அபெயசிங்ஹ என்பவர் அந்நகர சங்கத்தால் விலகிக்கொண்டபடியால் மேற்கூறப்பட்ட ஆளுகைச் சட்டத்தின் 33 ம் பிரிவின் உட்பிரிவு இரண்டின் முறைப்படி அவ்உவாட்டுக்கு ஓர் அங்கத்தவரை, 1936 ம் ஆண்டு (ஒக்றோபர்) ஐப்பசிமீ 31 ந் திகதி சனிக்கிழமை, தெரிவு செய்துகொள்ள உத்தேசித்திருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவராகத் தெரியப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் நொமினேசன் பேப்பர் என்று சொல்லப்பட்ட அத்தாள்மேல், எழுத்தில் கொடுபடவேண்டும். தெரியப்படுவதற்கென்று முன்வருகிறபெயர் வழிகாரர் அப்பிரிவிற்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்ய யோக்கியதை உடையவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உளளவர்களாகிய இருவரது கையொப்பமிட்டு அப்பத்திரம் கொடுக்கப்படுவதற்கென்று நியமித்திருக்கும் 1936 ம் ஆண்டு (ஒக்றோபர்) ஐப்பசிமீ 31 ந் திகதி யன்று 10 மணிக்கு அல்லது முன்பதாகவே நீர்கொழும்பு நகர (டிஸ்திறிக்) சங்கக் கந்தோரில் கொடுக்கப்படவேண்டும்.

இப்பிரிவிற்கு அங்கத்தவர்களாகத் தெரியப்படுவதற்கென்று ஒன்றுக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுக்கப்படுமாயிருந்தால் கீழே காட்டியபடி நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும் வூாக்குப்பெற்றுக்கொள்ளப்படும்.

முற்பகல் 8 மணிதொடக்கம் பிற்பகல் 4 மணிவரை வாக்கு (வோட்) பெற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| வாக்குகொடுக்குமிடம் 8 ம் பிரிவு றோமன்கத்தோலிக்க மிஷன்கவுஸ் சென் யோசேப் ஸ்றீற். | திகதி: 1936 ம் ஆண்டு கார்திகைமீ 14 ந் திகதி |

ஆர். எம். எம். வோர்ஸ்லி,
மேல்மாகாண அரசாட்சி எசன்ற்.

கொழும்பு கச்சேரி,
1936 ம் ஸூ புரட்டாதிமீ 18 ந் உ.

---

நீர்கொழும்பு நகர (டிஸ்திறிக்) சங்கம்
அங்கத்தவர் தெரிதல்.

வருகிற (நவம்பர்) கார்த்திகைமீ 21 ந் திகதி சனிக்கிழமையன்று நீர்கொழும்பு நகர (டிஸ்திறிக்) சங்கத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிதல் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று இத்தாலறிவிக்கபடுகின்றது.

அங்கத்தவர்களாகத் தேரப்பட முன்வரும் ஒவ்வொருவருடைய பெயரும் எழுத்தில் கொடுபடவேண்டும். அப்பெயர் கொண்ட பத்திரம் (நொமினேஷன் பேப்பர்) அப்பெயர்வழிகாரர் எந்தப் பிரிவிற்குத் தேரப்படுவதற்கென்று முன்வருகிறுரோ அந்தப் பிரிவிற்கு அங்கத்தவரைத் தேர்தல் செய்ய யோக்கியதை உள்ளவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய கட்சி இருவராவது கையொப்பமிடப்பட்டு அப்பத்திரம் கொடுபடுவதற்கென்று நியமித்திருக்கும் 1936 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 21 ம் திகதியன்று காலை 10 மணிக்கு அல்லது முனனதாகவே நீர்கொழும்பு நகர (டிஸ்திறிக்) சங்க கந்தோரில் கொடுபட வேண்டும்.

எந்தப் பிரிவிற்காவது அங்கத்தவர்களாகத் தேரப்படுவதற்கென்று ஒருவருக்கு மேலானவர்களின் பெயர்கள்கொடுபடுமாயிருந்தால் கீழே காட்டியபடி அப்பிரிவிற் கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும் வாக்கு (வோட்) எடுக்கப்படும். அவ் வாக்கு (வோட்) எடுதல் 1936 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழிமீ 5 ந் திகதி முற்பகல் 8 மணிக்கு தொடங்கிப் பிற்பகல் 4 மணிக்கு நிறுத்தப்படும்.

| வாக்கு (வோட்) | கொடுக்குமிடங்கள். |
|---|---|
| 1 ம் தெரிவுப் பிரிவிற்கு | மெயின் ஸ்றீறில் இருக்கும் செயின்ற் மேறிஸ் கல்லூரி |
| 2 ம் தெரிவுப் பிரிவிற்கு | செல்வி றோட்டில் இருக்கும் நகரமண்டபம். (ரவுண்ஹோல்) |
| 3 ம் தெரிவுப் பிரிவிற்கு | சீஸ்றீறறில் இருக்கும் செயின்ற் செபஸ்ரியன்ஸ் தமிழ் ஆண் பாடசாலை |
| 4 ம் தெரிவுப் பிரிவிற்கு | பெரியமுல்லையிலிருக்கும் றோமன் கதோலிக்க மிஷண்வீடு |
| 5 ம் தெரிவுப் பிரிவிற்கு | சிலாவம் றோட்டில் இருக்கும் செயின்ற் பீற்றேர்ஸ் ஆண்பாடசாலை |
| 6 ம் தெரிவுப் பிரிவிற்கு | தம்மிற்றவில் இருக்கும் றோமன்கத்தோலிக்க மிஷன் வீடு |
| 7 ம் தெரிவுப் பிரிவிற்கு | குறன செயின்ற் அன்ஸ் றோட்டிலிருக்கும் றோமன்கத்தோலிக்க மிஷன் வீடு |
| 8 ம் தெரிவுப் பிரிவிற்கு | செயின்ற் யோசெப்ஸ் ஸ்றீறிலிருக்கும் றோமன் கத்தோலிக்க மிஷன் வீடு |

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
மேல்மாகாண அரசாட்சி எசன்ற்.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஸூ புரட்டாதிமீ 18 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.